சுப்பிரமணியர் தினை.

தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

கந்தர்

சஷ்டி கவசம்.

—(o)—

T. சாரதா புத்தகசாலை அதிபர்

T. S. துரைசாமி முதலியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

முராரி அச்சுக்கூடம், சென்னை.

புதிய நாடகம்? வெளியாய் விட்டது. புதியநாடகம்?

அநேக நாடக கம்பெனிகளில் தயார்செய்துவரும்

ஸ்ரீமகா பாகவதத்தில் ஓர் பாகமாகிய

கஜேந்திரமோக்ஷ சரித்திரம்

டிராமா

இந்த சரித்திரம் பாகவதத்தில் மஹாவிஷ்ணுவினுடைய மகிமை விவேகிகள் கவனிக்கும்படியான பக்திரசமான சரித்திரம இது புதிதாய் எழுதி டிராமா நாடகத்திற் நிசைந்தவிதமாய் நாடகோபாத்தியாயரும் அநேக வின புத்தகங்கள் எழுதிய கவிராஜ கந்தசாமிப்பிள்ளை அவர்களாலும் அருமையான வர்ணமெட்டுகளமைத்து ஒவ்வொரு சீன்ஸ்கட்கு விஷயங்கள் தவறாமல்சேர்த்து நாடகத்திற் கனுகூலமாய். அச்சிட்டு விற்பனை செய்கிறோம் வேண்டியவர்கள் அடியிற் குறிப்பிந்த விலாசதாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணு—4

T. சாரதா புத்தகசாலை,

மின்ட் போஸ்டு, மதராஸ்.

இந்திய பதிவிரதையாகிய

சதி- அநுசூயா டிராமா

இதில் கர்மதை சூர்தாஸ் விஷயமும் அடங்கியுள்ளது.

இந்த நாடகம் மாதர்களுக்கனுகூலமான் நவரசம் பொருந்திய சிறந்த புண்ணியகதை இதில் அநுசூயா, கர்மதா, கங்காபவானி, பார்வதி, இலட்சுமி, சரஸ்வதி, தருமதேவதை முதலிய மஹா பதிவிரதைகளின் வைபவ விசேஷங்களும், தேவேந்திரன் மனைவி பூஜித்தலும் தேவேந்திரன், பரமேஸ்வரர், மஹாவிஷ்ணு, பிரம்ம தேவன், சூர்தாஸ், அத்திரி, மாண்டவ்யர், நாரதர் முதலானோர்களால் பெருமை வகிக்கது நாரதர்கொடுத்த இரும்புகடலையை அநுசூயாதேவி தன் கைபரிசத்தால் பொரிபடச்செய்தல் இச்சரிதையை எளிய நடையில் நாடகமாக எழுதி, நூதன வர்ணமெட்டுகளமைத்து அச்சிடப்பட்டது. இது ஒவ்வொரு நாடக கம்பெனியாரும் வாங்கிவாசித்து. ஆக்ட்செய்யத்தகுந்தது ஒவ்வொரு பாடல்களும் தலைப்பில் வர்ணமெட்டுகளையும் குறிப்பிட்டிருக்கிறது.

முதல்பாகம் விலை அணா—4

இரண்டாம்பாகம் விலை அணா—4

T. சாரதா புத்தகசாலை,

மிண்ட் போல்டு, மதராஸ்.

உ

சுப்பிரமணியர் துணை.

கந்தர்சஷ்டிகவசம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

அதிப்போர்க்கு வல்வினைபோங் துன்பம்போம் நெஞ்சில், பதிப்போர்க்குள் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும், நிஷ்டையுங் கைகூடு நிமலாருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

நூல்.

அமரரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி னெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனூர்
இஷ்டருக் குதவுள் செங்கதிர் வேலன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய லடஞ்செய்யும் மயில்வா கனனூர்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்த
வாவா வேலா புதனூர் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
சோசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
சிகிரி வேலவன் சீக்கிரம் வருக
சாஹவண பவனூர் சடுதியில் வருக
ரஹண பவச ரரர ரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
வினபவ சாஹ வீரா சமோகம
நிபவ சாஹண நிறநிற நிறண
வசர ஹணபவ விருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பாந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்

கிலியுஞ் சௌவுற் கினரொளி யையும்
நிலைபெற் றெண்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனிவொளி வொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணி முடி யாரும்
கீறிடு நெற்றியு நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
சாறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பலபூ ஷணமும் பதக்கமுந் தரித்த
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
மூப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவுயி றுந்தியும்
தவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த கற்சி ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செகண செகண செகண செகண
மொக மொக மொக மொக மொகமொகமொகணை
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

சரவ ரரர ரரர ரர
சிரிரிரி சிசிரிரி சிரிசிரி சிசி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
மூந்து மூந்து முருகவேள் மூந்து
என்றனை யாளு மோகச் செல்வ
மைந்தன் வேண்டும் வாமகிழ்ந் ததவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவி நோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிரா யிறைபவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினை காக்க
விதிசெவி பிரண்டுவேலவர் காக்க
நாசிக ளிரண்டும் கல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
மூப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செல்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை பிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெற காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருவேல் காக்க
பழுபதி முறம் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை வினைக்கவே காக்க
சித்திடை யழகுறச் செய்வேல் காக்க
காணுங் கபிற்றை கல்லவேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அதைவேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்கி
வட்டக் குதத்தை வலவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பெருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருவேல் காக்க
கைகளிரண்டுங் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் மூவாண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
காவிற் சாஸ்வதி கற்புணையாக
காபிக் கமலம் கல்வேல் காக்க

முப்பா லுடியை முனைவேல் காக்க
எபொழு தம்மனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகியே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத மீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கணவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னேக்க
தாக்க தாக்க தடையிற் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வல்லரக்கர்ப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களுங் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமாட்சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்

கனபூசை கொள்ளுங் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரருஞ் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை படியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளோக ளெலும்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலபல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியச் செருக்கும் ஒட்டிடப் பாவையும்
காசும் பணமுங் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடிபேனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றுன் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூத ரெனைக் கண்டாற் கலங்கி
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினின் மூட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கங் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

மூட்டி முட்டி விழிகள் பிதுக்கிட
செக்கு செக்கு செறிற் செறிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்ற பற்ற பலவன் தனலெரி
தனலெரி தனலெரி தனலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட்ட
புலியு கரியும் புன்னரி காயும்
எலியுங் காடியு மினித்தொடர்ந் தோட
தேளும் பாம்புஞ் செய்யாள் பூரான்
திடிவிட விஷங்கள் கடிதுற ரங்கம்
எறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஓளிப்புஞ் சனுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பு பித்தம்
குலைசயம் குன்மஞ் சொக்குச் சொக்கு
குடைச்சல் சிலந்தி குடலிப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படலை கைத்தாள் சிலந்தி
பற்குத் தாளை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியு மெற்றினைக் கண்டால்
நில்லா தோட நீயெனைக் காப்பாய்

நாரே முலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணு ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை யழித்த இனியவென் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகுமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தாரே
காரார் குழலாள் கலிமக னன்முய்
என்ன விருக்க யானுன்னைப் பாட
என்னைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனே

பாடினேன் ஆடினேன் பரவச மாக
நாடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியி லணிய
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனுர்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழுக வடிவேல் வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்கமலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாணைத் துவசம்
வாழ்க வாழ்கவென் வதனமைக னீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொருப்பதன்கடன்
பெற்றவள் குறைகள் பெற்றவளார்மே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையின் மாலையிற் கருத்துடனுளும்
ஆசா ரத்துடனே அங்கம் துலக்கி
நேச முடனெரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் மூப்பத தாறுரு கொண்டு
ஓதி யே செபித்து உகந்துநீ றணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல்தந் தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
சுவகோண மகிழ்ந்து நன்மை யளித்திடும்
சுவமத மெனவும நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமி ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப்பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சாவ் சத்குரு சங்கர் சத்தம

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
சிரலட் சுமிக்கு சிருந்துணவாகச்
சூ பத்மாவை துணித்தகை யதிலுல்
இருபத் தேழுவர்க் குவந்தமுதளித்த
குருபான் பழனி குன்றினி லிருக்கும்
சின்னகுழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனை பதியேபோற்றி
குறமகள் மணமகழ் கோவே போற்றி
நிறமிகு நிவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா வோற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்சிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோம் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம்-முற்றிற்று.